ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1688/5 - 2011 ජනවාරි 11 වැනි අඟහරුවාදා - 2011.01.11

*1688/5 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) – மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண மாகாண சபைக்குள் 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வீட்டு வாடகைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட பிரதேசம், வீட்டு வாடகைச் சபை ஸ்தாபிக்கும் அறிவித்தல்

மத்திய மாகாண மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, மின்சக்தி, எரிபொருள் சக்தி, வீடமைப்பு, நிர்மாண அமைச்சர் பந்துல எஸ். பீ. யாலெகம ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (திருத்தச் சட்ட) நியதிச் சட்டத்தின் மூலம் சொல்லப்படும் அடிக்கடி திருத்தப்பட்ட, 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீட்டு வாடகை நியதிச் சட்டத்தின் சட்ட திட்டங்கள் மத்திய மாகாணத்திற்குள் நடைமுறைப்படுத்தல் தொடர்பாக கீழ்க் காணப்படும் கட்டளையை பிரகடனப்படுத்துகிறேன் :

1 (I) மத்திய மாகாணத்தில் தற்போது வீட்டு வாடகைச் சட்டம் நடைமுறையில் இருக்கும் அதிகாரப் பிரதேசமும் அதன் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென எனது அபிப்பிராயப்படியான பிரதேசத்திற்காக ஒவ்வொரு வீட்டு வாடகைச் சபை அமைத்து, நடைமுறைப்படுத்தும் சிக்கல்கள் தோன்றியுள்ளதென்பது எனது கருத்தென்பதுடன் அப்பிரதேசத்தினுள் வதிவிலுள்ள வாடகை வீட்டுரிமையாளர்களினால் அப்பிரதேச சட்டத்திற்கு புறம்பான பிரதேசமாக பெயரிட்டு, சட்டத்தினால் அப்புறப்படுத்தும் கஷ்டநிலை ஏற்பட்டுள்ளதால் மேற்கூறப்பட்ட கஷ்டங்களை அப்புறப்படுத்துவதற்காக சட்டத்தின் நிதி ஒதுக்கீடு இல்லாததினாலும், 45 ஆவது சரத்தினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நியதிச் சட்டத்தின் 2 (1) (அ) 38 (1) உப சரத்தினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் குறிப்பிடும் வீதமாக நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென்பதாக கட்டளைகளை பிரகடனப்படுத்துகிறேன் :

(II) சட்டத்தின் 2 (1) (ஆ) உப சரத்தினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி இங்கு உப அட்டவணையின் முதலாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசத்திற்குள் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென பிரகடனப்படுத்துகிறேன். இன்னும் சட்டத்தின் 38 (1) உப சரத்தினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் சட்டத்தின் மேற்கூறப்பட்ட 2 (1) (ஆ) உப சரத்தின் பிரகாரம் பிரகடனப்படுத்தப்படும் ஒவ்வொரு பிரதேசத்திற்காக அதன் அட்டவணையின் இரண்டாவது நிரலில் காட்டப்பட்டுள்ளபடி வீட்டு வாடகை சபை மூன்று ஸ்தாபிக்கப்படும்.

2. இக்கட்டளையானது, இவ் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிட்ட திகதியிலிருந்து அமுலுக்கு வருதல் வேண்டும்.

#### செல்லுபடியாகுதலும் நகர்வு ஏற்பாடுகளும்

3 (I) 2003, யூன் 25 ஆந் திகதிய 1294/29 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் IV (அ) ஆவது பகுதியில் மாகாண சபை அறிவித்தலின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட மத்திய மாகாண சபையின் வீட்டு வாடகைச் சபை அதிகாரப் பிரதேசத்தை ஒன்றிணைக்கும் அறிவிப்பு இத்துடன் செல்லுபடியற்றதாகின்றது.

(II) மேற்கூறப்பட்ட மத்திய மாகாண சபையின் வீட்டு வாடகைச் சபை அதிகார பிரதேசத்தை ஒன்றிணைக்கும் அறிவித்தலை செல்லுபடியற்றதாக்கியதை கவனத்திற் கொள்ளாமல்–

(அ) ஏதாவதொரு நிலையம் தொடர்பாக அந்த அறிவித்தலின் கீழ் ஏதாவதொரு வீட்டு வாடகைச் சபை மூலம் செய்யப்பட்ட சகல விதமான அஞ்ஞானங்களும் அல்லது தீர்மானங்களும் இவ்வறிவித்தல் தொடர்பான சட்டதிட்டங்களின் கீழ் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ற வகையில் நடைமுறையில் இருக்கும் வீட்டு வாடகைச் சபை மூலம் கோரப்பட்ட அஞ்ஞானங்கள் அல்லது தீர்மானங்களென கருத்திற் கொள்ளப்படவேண்டுமென்பதுடன், அவைகள் அதன்படி பலமுடையதாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) கம்பளை வீட்டு வாடகைச் சபை தவிர அந்த அறிவித்தலின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டுவாடகைச் சபை இந்த அறிவித்தலின் கீழ் பதவி நிலையில் இருக்க வேண்டுமென்பதுடன், இவ்வறிவித்தலின் கீழ் வீட்டு வாடகைச் சபை என்று கணக்கிடப்படுதல் வேண்டும். இன்னும் அதன் உறுப்பினர்கள் இவ்வறிவித்தலின் கீழ் புதிய நியமித்தல் நடைமுறைபெறும் வரை அப்படியே பதவி வகித்தல் வேண்டும் ;

(இ) இவ்வறிவித்தல் ஆரம்பமாகும் திகதிக்கு முன்பதாக உள்ள திகதியில் அவ்வறிவித்தலின் கீழ் ஏதாவதொரு வீட்டு வாடகைச் சபை எதிர்காலத்தில் பரீட்சார்த்த நிலையில் இருக்கும் சகல நீதியுடனான அந்த அறிவித்தலை இரத்துச் செய்தது போன்று, நடைமுறையிலுள்ள வீட்டு வாடகைச் சபை எதிர்காலத்தில் எல்லா வகையிலும் கேட்டு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) அந்த அறிவித்தலின் கீழ் செய்யப்பட்ட ஏதாவதொரு செயல், வெளியிடப்பட்ட ஏதாவதொரு உறுதிப்பத்திரம், செலுத்தப்பட்ட ஏதாவதொரு கொடுப்பனவு, வெளியிடப்பட்ட ஏதாவதொரு விளம்பரம், அல்லாவிடின் செய்யப்பட்ட தீர்மானங்கள், கட்டளைகள், வழங்கல்கள், கோரிக்கைகள் ஏதேனும் இவ்வறிவித்தல் செய்யப்படுவதற்கு முன்பதாக உள்ள திகதிகளில் செயற்படுமேயாயின் அவற்றை தொடர்ச்சியாக அமுல்படுத்தப்படவேண்டுமென்பதுடன், இவ்வறிவித்தலின் கீழ் அவற்றை செய்ய முடியுமானவரை வழங்க முடியுமானவரை, அல்லது கொடுக்க முடியுமானவரை அவற்றை இவ்வறிவித்தலுடன் தொடர்பான சட்ட திட்டங்களின் கீழ் வழங்கி அல்லது உள்ளது போன்று பலத்துடன் இருத்தல் வேண்டும்.

4. 2010, ஒகத்து மாதம் 06 ஆந் திகதி இல. 1665/28 கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் iv (அ) ஆவது பகுதியில் மாகாண சபை அறிவித்தலின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் வீட்டு வாடகைச் சபை அதிகாரப் பிரதேசத்தை ஒன்றிணைப்பதற்கும், அதிகாரப்பிரதேசத்தை நிச்சயப்படுத்துவதற்களவு அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

**அட்டவணை**

| முதலாவது நிரல் | | இரண்டாவது நிரல் |
|---|---|---|
| தொடர் இல. | அதிகாரப் பிரதேசம் | வீட்டு வாடகைச் சபை |
| (i) | கண்டி மாநகர சபை அதிகாரப் பிரதேசம் | கண்டி வீட்டு வாடகைச் சபை (தொடர் இலக்கம் i தொடக்கம் xxii வரையிலான அதிகாரப் பிரதேசத்திற்காக) |
| (ii) | கம்பளை நகர சபை அதிகாரப் பிரதேசம் | |
| (iii) | நாவலப்பிட்டிய நகர சபை அதிகாரப் பிரதேசம் | |
| (iv) | கடுகண்ணாவ நகர சபை அதிகாரப் பிரதேசம் | |
| (v) | வத்தேகம நகர சபை அதிகாரப் பிரதேசம் | |
| (vi) | ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (vii) | அக்குரணை பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (viii) | பஸ்பாகே பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (ix) | பாத்ததும்பர பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (x) | பன்வில பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xi) | பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபைஅதிகாரப் பிரதேசம் | |
| (xii) | பூஜாபிட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |

| முதலாவது நிரல் | | இரண்டாவது நிரல் |
|---|---|---|
| தொடர் இல. | அதிகாரப் பிரதேசம் | வீட்டு வாடகைச் சபை |
| (xiii) | கங்கவட்ட கோரளை பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xiv) | கங்க இஹல பிரதேச சபைஅதிகாரப் பிரதேசம் | |
| (xv) | உடுநுவர பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xvi) | உடபலாத்த பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xvii) | குண்டசாலை பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xviii) | மெததும்பர பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xix) | யட்டிநுவர பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xx) | மினிபே பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xxi) | தும்பனே பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xxii) | உடதும்பர பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xxiii) | மாத்தளை மாநகர சபை அதிகாரப் பிரதேசம் | மாத்தளை வீட்டு வாடகைச் சபை (தொடர் இலக்கம் |
| (xxiv) | மாத்தளை பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | xxiii தொடக்கம் xxiv வரையிலான |
| (xxv) | அம்பன்கங்க கோரளை பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | பலப்பிரதேசத்திற்காக). |
| (xxvi) | உகுவலை பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xxvii) | யட்டவத்த பிரதேச சபைஅதிகாரப் பிரதேசம் | |
| (xxviii) | ரத்தொட்ட பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xxix) | நாஉல பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xxx) | தம்புள்ள பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xxxi) | பல்லேபொல பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xxxii) | கலேவெல பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xxxiii) | ல்க்கல பல்லேகம பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | நுவரெலியா வீட்டு வாடகைச் சபை (தொடர் இலக்கம் |
| (xxxiv) | வில்கமுவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | xxxv தொடக்கம் xlii வரையில் அதிகாரப் |
| (xxxv) | நுவரெலியா மாநகர சபை அதிகாரப் பிரதேசம் | பிரதேசத்திற்காக. |
| (xxxvi) | ஹட்டன் திக்ஓய நகர சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xxxvii) | தலவாகெலே லிந்துல நகர சபைஅதிகாரப் பிரதேசம் | |
| (xxxviii) | நுவரெலியா பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xxxix) | கொத்மலே பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xl) | வலப்பனே பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xli) | ஹங்குரன்கெத்த பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |
| (xlii) | அம்பகமுவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் | |

பந்துல எஸ். பீ. யாலெகம,
வீதி அபிவிருத்தி,மின்சக்தி,
எரிபொருள் சக்தி, வீடமைப்பு,
நிர்மாண அமைச்சர்,
மத்திய மாகாண சபை.

வீதி அபிவிருத்தி,மின்சக்தி,
எரிபொருள் சக்தி, வீடமைப்பு, நிர்மாண அமைச்சு,
மத்திய மாகாண சபை,
யட்டிநுவர வீதி,
கண்டி,
2010, திசெம்பர் 29.

1- 532

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.